2026 GROUP IV TEST – 6

General Tamil Explanation

1. **விடை: A**
   - சொல் என்பதற்கு 'மொழி' என்றொரு பொருளுண்டு.
   - உயிரெழுத்துகள் அனைத்தும் சொல்லின் முதலில் வரும்
   - க் ச் ட் த் ப் ற் என்ற வல்லின மெய் ஆறும், ங் எனும் மெல்லின மெய் ஒன்றும் சொல்லின் இறுதியில் வருவதில்லை.

2. **விடை: D**
   - ஞ – வரிசையில் ஞ, ஞா, ஞெ, ஞொ ஆகிய நான்கு எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.

3. **விடை: A**
   - வ – வரிசையில் வ, வா, வி. வீ. வெ. வே, வை, வௌ ஆகிய எட்டு எழுத்துகளும் சொல்லின் முதலில் வரும்.

4. **விடை: C**
   - ங – வரிசையில் 'ங' என்னும் ஓர் எழுத்து மட்டுமே சொல்லில் முதல் எழுத்தாக வருகிறது. எ.கா–ஙனம்
   - (இக்காலத்தில் ஙனம் என்னும் சொல் தனித்து இயங்காமல் அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம் என்னும் சொற்களில் மட்டுமே வழங்கி வருகிறது.)

5. **விடை: A**
   - 'ங்' என்னும் மெல்லின மெய் 'விதம்' எனப் பொருள் தரும் 'ஙனம்' என்னும் சொல்லில் மட்டும் முதலில் வரும். இந்தச் சொல்லும் தனியாக வராது.
   - அ, இ, உ என்ற சுட்டெழுத்துகளுடனும் எ, யா என்னும் வினா எழுத்துகளுடனும் இணைந்து அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் என்று வரும். தற்காலத் தமிழில் இவற்றின் பயன்பாடு அரிதாகவே உள்ளது

6. **விடை: B**
   - உங்ஙனம் என்பது தற்பொழுது தமிழகத்தில் வழக்கில் இல்லை. ஆனால், தமிழ் இலக்கியங்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.
   - இன்றும் இலங்கைத் தமிழர் உங்கு, உங்ஙனம் போன்ற சொற்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.
   - இவ்விலக்கண வரையறைகள் அனைத்தும் எழுத்து மொழிக்கானவையே அன்றி, பேச்சு மொழிக்கானவை அல்ல.

7. **விடை: C**
   - ங, ஞ, ய, வ ஆகிய உயிர்மெய் எழுத்து வரிசைகளில் சில எழுத்துகள் மட்டுமே சொல்லின் முதலில் வரும்.
   - ங, ஞ, ய, வ ஆகிய உயிர்மெய் எழுத்து வரிசைகளில் மொழி முதலில் வருவதாகக் குறிப்பிடப்பட்ட எழுத்துகள் தவிர பிற எழுத்துகள் சொல்லின் முதலில் வாரா.

SHANKAR IAS ACADEMY

8. **விடை: A**

- நொ என்னும் எழுத்து ஓரெழுத்து ஒரு மொழியாகத் துன்பம் என்னும் பொருளில் வரும்

9. **விடை: B**

- ஒகர வரிசையில் நொ தவிர பிற உயிர்மெய் எழுத்துகள் மொழி இறுதியில் வருவதில்லை.

10. **விடை: A**

- க் ச் ட் த் ப் ற் என்ற வல்லின மெய் ஆறும், ங் எனும் மெல்லின மெய் ஒன்றும் சொல்லின் இறுதியில் வருவதில்லை.
- பழைய இலக்கண நூலார் மொழி இறுதிக் குற்றியலுகர எழுத்தையும் சேர்த்துக்கொள்வர்.
- ஞ் ந் வ் மூன்றும் பழைய இலக்கிய வழக்கில் சொல்லின் இறுதி எழுத்தாக வந்துள்ளன. ஆயினும், இன்றைய வழக்கில் இவை சொல்லுக்கு இறுதி எழுத்தாக வருவதில்லை.

11. **விடை: B**

- ஞ் ந் வ் மூன்றும் பழைய இலக்கிய வழக்கில் சொல்லின் இறுதி எழுத்தாக வந்துள்ளன.
- ஆயினும், இன்றைய வழக்கில் இவை சொல்லுக்கு இறுதி எழுத்தாக வருவதில்லை.

12. **விடை: B**

நெட்டிலை **நெடுமை + இலை**

- நெடு + இலை – ஈறுபோதல்
- நெட்டு + இலை – தன்னொற்றிரட்டல்
- நெட்ட் + இலை – உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்
- நெட்டிலை – (ட் + இ) – உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

13. **விடை: D**

- ஈறுபோதல் விதியின்படி மை கெட்டு நிலைமொழியின் இறுதி எழுத்து மகர மெய்யாக இருந்தால் **'முன் நின்ற மெய் திரிதல்'** விதியின்படி புணரும்.
  செந்தமிழ் – செம்மை + தமிழ்
  - செம் + தமிழ் – **ஈறுபோதல்**
  - செம் + தமிழ் – **(ம்–ந்) முன் நின்ற மெய் திரிதல்**
- ஈறுபோதல் விதியின்படி மை விகுதி கெட்டு, நிலைமொழியின் இறுதி எழுத்து உயிரெழுத்தாய் இருந்து வருமொழி வல்லின மெய்யாக இருப்பின் 'இனமிகல்' விதியின்படி புணரும்.
- கருங்கடல் – கருமை + கடல்
  - கரு + கடல் – **ஈறுபோதல்**
  - கரு + கடல் – **(ங்) இனமிகல்**

14. **விடை: B**

(சொல்) **(புணர்ச்சி விதி)**

- பாசிலை - ஆதி நீடல்
- சேதாம்பல் - முன் நின்ற மெய் திரிதல்
- வெற்றிலை - தன்னொற்றிரட்டல்
- பைங்கூழ் - இனையவும்

SHANKAR IAS ACADEMY

15. **விடை: C**

- வெற்றிலை – வெறுமை + இலை – வெற்று + இலை – வெற்றிலை எனப் புணர்ந்தது
- ஈறுபோதல் விதியின்படி மை கெட்டு நிலைமொழியின் இறுதி எழுத்து மகர மெய்யாக இருந்தால் **'முன் நின்ற மெய் திரிதல்'** விதியின்படி புணரும்.
- செந்தமிழ் – செம்மை + தமிழ்

16. **விடை: D**

சிற்றோடை சிறுமை + ஓடை

- சிறு + ஓடை; 'ஈறுபோதல்' என்னும் விதிப்படி மை கெட்டது.
- சிற்று + ஓடை; 'தன்னொற்று இரட்டல்' என்னும் விதிப்படி பகுதியாகிய சிறு என்பதன் றகரம் இரட்டித்துச் சிற்று என ஆகியது.
- சிற்ற் + ஓடை = சிற்றோடை.பின் 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்' என்னும் விதிப்படி, உகரம் கெட்டு, சிற்ற் என்றாகியது.
- பின்னர் 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி வருமொழி உயிர் ஏறிப் புணர்ந்து சிற்றோடை என்றாயிற்று.

17. **விடை: C**

பைந்தமிழ் – பசுமை + தமிழ்

- பசு + தமிழ் – **ஈறுபோதல்**
- பைசு + தமிழ் – **அடி அகரம் 'ஐ' ஆதல்**
- பை + தமிழ் – **இனையவும்**
- பை + தமிழ் – **(ந்) இனமிகல்**

18. **விடை: C**

- நெடுநாவாய் = நெடுமை + நாவாய்

19. **விடை: D**

- விதிர்ப்புற்றஞ்சி = விதிர்ப்பு + உற்று + அஞ்சி

20. **விடை: B**

- நற்கறிகள் = நன்மை + கறிகள்

21. **விடை: B**

- இருப்புமுனை = இரும்பு + முனை

22. **விடை: A**

- பல் + துளி = ப ்றுளி

23. **விடை: B**

- நாழி + உரி = நாடுரி

SHANKAR IAS ACADEMY

24. **விடை: D**

- சேவடி – செம்மை + அடி
- சே + அடி = சேவடி

25. **விடை: B**

- இது + ஆவது = இ்தாவது

26. **விடை: A**

- தண்டளிர்ப்பதம் = தண்மை + தளிர் + பதம்

27. **விடை: C**

- என்றாகடியமான = என்று + ஆகடியம் + ஆன

28. **விடை: B**

சில மென்றொடர் குற்றியலுகர சொற்களுக்குப் பின் இருந்தால் மட்டும் வல்லினம் மிகும் **(ண்டு, ம்பு, ங்கு, ன்று, ந்து)**	• நண்டுக்கொடுக்கு • பாம்புப்புற்று • குரங்குக்குட்டி • கன்றுக்குட்டி • மருந்துக் கடை

29. **விடை: D**

(அகர, இகர ஈற்று) வினையெச்சங்களுடன் புணர்கையில் வல்லினம் மிகும் - ஆடச் சொன்னார்

30. **விடை: B**

மகர மெய்யில் முடியும் சொல்லை அடுத்து வல்லினம் வந்தால், அந்த மகர மெய் அழிந்து அவ்விடத்தில் வல்லினம் மிகும்.	• மரம் + சட்டம் = மரச்சட்டம், • வட்டம்+பாறை = வட்டப்பாறை

31. **விடை: C**

இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும்.	• மல்லிகைப்பூ • சித்திரைத்திங்கள் • எலிக்குஞ்சு • மார்கழித் திங்கள் • எறும்புச் சாரை • சாரைப்பாம்பு

SHANKAR IAS ACADEMY

32. **விடை: A**

உவமைத் தொகையில் வல்லினம் மிகும்.	• தாமரைப்பாதம் • மலர்ப்பாதம் • மலர்க்கண் • தாமரைக்கை • தாய்த்தமிழ்

33. **விடை: C**

சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களின்பின் வல்லினம் மிகும்.	• சாலப்பேசினார் • சாலப் பசித்தது • சாலச் சிறந்தது • தவப் பெரியது • தவப் பயன் • தவச்சிறிது

34. **விடை: B**

உம்மைத் தொகையில் திரிபு ஏற்படுமாயின் அங்கு வல்லினம் மிகும். அதாவது திரிந்த வடிவங்களில் வல்லினம் மிகும்.	இரா + பகல் – இராப்பகல். (இரவு என்றத் திரிந்தவடிவம் 'இரா' என்பதாகும்) .

35. **விடை: A**

சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும்.	• வாழ்க்கைப்படகு • உலகப்பந்து • தமிழ்த்தாய் • வாய்ப்பவளம்

36. **விடை: A**

எழுவாய் தொடரில் உள்ள **எழுவாய்ச் சொற்கள் வன்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தால்** வல்லினம் மிகும்	• கொக்குப் பறந்தது • உப்புக் கரைந்தது

37. **விடை: D**

உலை	கொல்லனுலை; நீருலை
உழை	**பக்கம்; மான்**
உளை	பிடரிமயிர்; சேறு

SHANKAR IAS ACADEMY

38. **விடை: A**

- கலி - வறுமை
- கழி - நீக்கு
- களி - மகிழ்ச்சி
- களை - அழகு

39. **விடை: B**

கலை	**ஆண்மான்; மேகலை**
கழை	கரும்பு; மூங்கில்
களை	அயர்வு; அழகு

40. **விடை: D**

- சேதாம்பல் = செம்மை + ஆம்பல்
  - செம் + ஆம்பல்; 'ஈறுபோதல்' விதிப்படி, மை கெட்டு செம் + ஆம்பல் ஆயிற்று
  - சேம் + ஆம்பல்; 'ஆதி நீடல்' விதிப்படி – சேம் + ஆம்பல் ஆயிற்று
  - சேத் + ஆம்பல் = சேதாம்பல், பின் 'முன்னின்ற மெய் திரிதல்' என்னும் விதிப்படி மகரமெய் தகரமெய் ஆகத் திரிந்து சேத் + ஆம்பல் என்றாகி, 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி சேதாம்பல் என்றாயிற்று.

41. **விடை: B**

வல்லை	விரைவு
வள்ளை	ஒரு கொடி

42. **விடை: C**

தோலி	**ஓர் மீன்**
தோழி	பாங்கி
தோளி	அவுரி

43. **விடை: B**

சாலிகை	**கவசம்**
சாளிகை	வண்டு; பணப்பை

44. **விடை: D**

பூழை	**துவாரம்; வாயில்**
பூளை	இலவம் பஞ்சு

SHANKAR IAS ACADEMY

45. **விடை: B**

நீலி	**அவுரி; காளி**
நீளி	நெடியன்
நலி	வருந்துவாய்
நளி	குளிர்; நெருக்கம்

46. **விடை: C**

- தொல்காப்பியர் சுட்டுப்பெயர்களை **உயர்திணைக்கு** உரிய சுட்டுப் பெயர்கள், அஃறிணைக்கு உரிய சுட்டுப்பெயர்கள் என இரு வகைப்படுத்துகிறார்.
- சங்க காலத்தில் **அவர்** என்பது **பலரைக் குறிக்கும் பன்மைச் சுட்டுப்பெயர்**. ஆனால் அது ஒருவனையோ ஒருத்தியையோ மட்டும் குறிக்கும் **உயர்வு ஒருமைப்பெயராகவும்** சங்க காலத்தில் வழங்கியது
- இவ்வாறு உயர்வு காரணமாக ஒருவரை மட்டும் அவர் என்ற சொல் குறிக்கவே, பலரைக் குறிக்க 'அவர்' என்பதோடு 'கள்' விகுதி சேர்த்து, **அவர்கள்** என்ற பன்மைச் சுட்டுப்பெயர் இடைக்காலத் தமிழில் உருவாக்கப்பட்டு வழங்கி வரலானது.

47. **விடை: D**

- அகச்சுட்டு - இவன்
- புறச்சுட்டு - இம்மலை
- சேய்மைச்சுட்டு - உவன்
- சுட்டுத்திரிபு - அந்தமரம்

48. **விடை: A**

<u>புறச்சுட்டு:</u>

- **அவ்வானம், இம்மலை, இந்நூல்** – இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினாலும் பிற எழுத்துகள் பொருள் தரும்.
- இவ்வாறு **சுட்டு எழுத்துகள் சொல்லின் வெளியே (புறத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது** புறச்சுட்டு எனப்படும்

49. **விடை: C**

- உயர்திணை ஆண்பால் - உவன்
- உயர்திணை பலர்பால் - அவர்
- அஃறிணை ஒருமை - இது
- அஃறிணை பன்மை - உவை

50. **விடை: B**

- மற்ற தன்மை, முன்னிலைப் பன்மைகளில் **யாங்கள், நாங்கள், நீங்கள்** போன்ற வடிவங்களிலும் கள் விகுதி இருப்பது இங்கே கருதத்தக்கது.

SHANKAR IAS ACADEMY

51. **விடை: C**

- **'ய'கர** ஈற்றுச் சொற்கள் முன் **மெல்லினம்** மிகும்.

எ.கா.

- மெய் + மயக்கம் = மெய்ம்மயக்கம்
- மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்
- செய் + நன்றி = செய்ந்நன்றி

- வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் **யரழ** முன்னர் **மெல்லினம் மிகும்.**

எ.கா.

- வேய் + குழல் = வேய்ங்குழல்
- கூர் + சிறை = கூர்ஞ்சிறை
- பாழ் + கிணறு = பாழ்ங்கிணறு

- **'புளி'** என்னும் சுவைப் பெயர் முன்னர் **வல்லெழுத்து மட்டுமன்றி மெல்லினமும் மிகும்.**

எ.கா.

- புளி + கறி = புளிங்கறி
- புளி + சோறு = புளிஞ்சோறு

52. **விடை: D**

- **உள்ளது, இருக்கிறது** என்னும் சொற்களின் ஒருமை பன்மை வடிவங்கள் சில சமயங்களில் சரியாகப் பயன்படுத்தப்படுவதில்லை.
  - நிறைய பிரச்சினைகள் உள்ளது.
  - அங்கு கிழிந்த துணிகள் குவிந்திருக்கிறது.
- இவ்விரு எடுத்துக்காட்டின் வினைமுடிபுகள் உள்ளன, இருக்கின்றன எனப் பன்மை பயன்படுத்தப்பட வேண்டும்
- ஏனெனில் பிரச்சினைகள், துணிகள் ஆகியவை பன்மை என்பதைக் கவனியுங்கள்.
  - **நிறைய பிரச்சினைகள் உள்ளன.**
  - **அங்கு கிழிந்த துணிகள் குவிந்திருக்கிறன**
  - **புத்தகம், மேசை இரண்டும் அங்கே உள்ளன.**
- இங்கு, எழுவாய் (புத்தகம், மேசை) இரண்டு இருப்பதால், பன்மை வந்துவிடுகிறது. எனவே, புத்தகம், மேசை ஆகியவை அங்கே உள்ளன என எழுத வேண்டும்.
  - **தொடர்களில் ஒருமை, பன்மை முடிபுகள்**
  - **மாடு புல்லை மேய்கிறது - ஒருமைக்கேற்ற ஒருமை முடிபு**
  - **மாடுகள் புல்லை மேய்கின்றன - பன்மைக்கேற்ற பன்மை முடிபு**
- மேலே காட்டப்பட்ட தொடர்கள் சரியாக உள்ளன. அவ்வாறின்றி, 'மாடு புல்லை மேய்கின்றன' என்பதும் 'மாடுகள் புல்லை மேய்கிறது என்பதும் தவறான தொடரமைப்புகள் ஆகும்.
- இங்கு நாம் கவனிக்க வேண்டிய ஒன்று. எழுவாய் (மாடு) ஒருமையில் இருப்பின், அதற்கேற்ற வினைமுடிபும் (மேய்கிறது) ஒருமையில் இருக்கவேண்டும்.
- எழுவாய் (மாடுகள்) பன்மையில் இருப்பின் அவற்றிற்கேற்ற வினைமுடிபும் (மேய்கின்றன) பன்மையில் இருக்கவேண்டும் என்பதே. மேலும் சில எடுத்துக்காட்டுகள்

SHANKAR IAS ACADEMY

53. **விடை: D**

- எந்த என்று வந்தால் அதன் பிறகு ஒருமை வர வேண்டும்

(எ–கா)

- எந்தப் புத்தகமும் (புத்தகங்களும் என்பது தவறு)
- எந்த நாட்டிலும் (நாடுகளிலும் என்பது தவறு)

54. **விடை: D**

- ஒன்று என்னும் நிலைமொழியின் முன், வருமொழி முதலெழுத்து உயிரெழுத்தாக இருந்தால் மட்டுமே ஓர் என மாறும்.
- ஒன்று + ஆடு = ஓர் ஆடு எனப் புணரும்
- அரசன் ஒருவன், பெண்ணொருத்தி, மாணவன் ஒருவன் என்று எழுதினாலே போதும். ஒரு/ ஓர் ஆகிய இரண்டையும் அஃறிணைச் சொற்களுக்குமுன் பயன்படுத்துவோம்.

55. **விடை: C**

- ஆசிரியர் ஒருவர் என்பதே சரி,உயிரெழுத்துக்கு முன் ஓர் வரவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.
- ஆயினும், இங்கு எடுத்துக்காட்டப்பட்ட சொல் (ஆசிரியர்), உயர்திணைக்கு உரியது.
- உயர்திணைச் சொற்களுக்குமுன் ஒரு/ ஓர் வரவேண்டியதில்லை

56. **விடை: C**

- கபிலன் என்பது ஆணைக் குறிப்பது. இது ஆண்பால் ஆகும்.
- வள்ளி என்னும் சொல் பெண்ணைக் குறிப்பதால் பெண்பால் ஆகும். மாணாக்கர் என்பது பலரைக் குறிப்பதால் பலர்பால் ஆகும்
- புன்னை என்னும் சொல் ஒரு பொருளைக் குறிக்கிறது. ஒன்றன்பால் ஆகும்

57. **விடை: C**

- மாணவன், மாடு, ஒன்று என்பன ஒருமையைக் குறிக்கும்.
- மாடுகள், மாணவர், பல என்பன பன்மையை உணர்த்தும்

58. **விடை: A**

- 'புத்தகம், மேசை இரண்டும் அங்கே உள்ளன' என்பது சரியான தொடராகும்
- இத்தொடரில் 'புத்தகம்', 'மேசை' என இரண்டு வெவ்வேறு அஃறிணைப் பொருட்கள் (எழுவாய்கள்) இணைந்து வந்துள்ளன. ஒன்றுக்கும் மேற்பட்ட பொருட்கள் வரும்போது அது **பன்மை** ஆகிவிடுகிறது. எனவே, அதற்குரிய வினைமுற்று 'உள்ளது' (ஒருமை) என முடியாமல், **'உள்ளன'** என்ற பன்மை வினைமுடிவைப் பெற்று வந்துள்ளது.

59. **விடை: B**

- என்னிடம் ஒரு காசுகூட இல்லை. (குறைந்தபட்சம்)
- தெருவில் ஒருவர் கூட நடமாடவில்லை. (முற்றுப் பொருள்)
- அவனுக்கு வரையக்கூடத் தெரியும். (எச்சம் தழுவிய கூற்று)
- படிப்பு மட்டும் இருந்தால் போதும் - இச்சொல் வரையறைப் பொருள் தருகிறது. முடிந்தவரை, குறிப்பிட்ட நேரம் வரை என்னும் பொருள்களிலும் வருகிறது.

SHANKAR IAS ACADEMY

60. **விடை: D**

- **ஆவது** என்பது பல பொருள்களில் வரும் இடைச்சொல்லாகும்.
  - ஐந்து பேராவது வாருங்கள். (குறைந்த அளவு)
  - அவனாவது, இவனாவது செய்து முடிக்கவேண்டும். (இது அல்லது அது)
  - முதலாவது, இரண்டாவது, (வரிசைப்படுத்தல்)
- இன்றைக்கு மழைபெய்யுமோ? - ஓ என்ற இடைச்சொல்லின் ஐயப்பொருள்

61. **விடை: B**

- 'தான்' என்னும் இடைச்சொல்லும் அழுத்தப் பொருளில்தான் வருகின்றது. சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் வருகிறதோ, அதனை முதன்மைப்படுத்துகின்றது.
- ஒரு சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே வருகிறது.
  - நிர்மலாதான் நேற்று விழாவில் பாடினாள்
- சொற்றொடரின் இறுதியில் வந்து இசைவு, சாத்தியம், பொருத்தம் ஆகிய பொருள்களிலும், தகவலாகவும், வதந்தியாகவும் செய்தியைக் கூறுவதற்கும் பயன்படுகிறது.
  - உள்ளே வரலாம். (இசைவு)
  - இனியன் தலைநகர் போகிறானாம். (தகவல்)/செய்தி
  - பறக்கும் தட்டு நேற்றுப் பறந்ததாம். (வதந்தி)/பொய்மொழி

62. **விடை: A**

- கடி நுனி – கூர்மையான நுனி

63. **விடை: B**

- சிதல் எறும்பு ஆதி மூக்கு அறிவின்மூ வறிவுயிர்- கறையான் எறும்பு முதலியவை தொடு உணர்ச்சி, சுவை உணர்ச்சி ஆகிய இரண்டுடனே மூக்கால் அறியும் முகரும் உணர்ச்சியும் உடைய மூவறிவு உயிர்களாகும்
- முரள்நந்து ஆதிநா அறிவொடுஈர் - சிப்பி, சங்கு முதலிய நீர்வாழ் உயிரினங்கள் தொடு உணர்ச்சியும், நாக்கால் அறியும் சுவை உணர்ச்சியும் உடைய ஈர் அறிவு உயிர்களாகும்
- தும்பிவண்டு ஆதிகண் அறிவினால் - தும்பி, வண்டு முதலியவை மேற்கூறிய மூன்று உணர்ச்சிகளோடு கண்ணால் பார்த்து அறியும் பார்வை உணர்ச்சியும் உடைய நாலறிவு உயிர்களாகும்
- வானவர் மக்கள் நரகர் விலங்குபுள் - தேவர், மனிதர், நரகர், விலங்குகள், பறவைகள் முதலியோர் மேற்குறிப்பிட்ட நான்கு உணர்வுகளோடு காதால் கேட்டறியும் கேட்டல் உணர்ச்சியும் உடைய ஐயறிவு உயிர்களாவர்

64. **விடை: A**

- இமிழ் கடல், கலி கெழு மூதூர் -இவை இசை குறித்த உரிச்சொற்கள்
- நனி வருந்தினை,கடி அரண் - இவை குறிப்புணர்த்திய உரிச்சொற்கள்
- தவச் சிறிது - மிகுதி என்னும் பொருள் குறித்த உரிச்சொல்

SHANKAR IAS ACADEMY

65. **விடை: B**

- உறு, தவ, நனி என்ற மூன்று உரிச்சொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருகின்றன.
- உறு பசி; தவச் சிறிது; நனி நன்று

66. **விடை: B**

- அவனை, அவனால் - இடை இயற்சொல்
- அழகு, அன்பு - உரி இயற்சொல்
- காற்று, நிலவு, ஞாயிறு, பலகை, மண், பொன் - பெயர் இயற்சொல்
- படித்தான், தூங்கினான், வந்தான் - வினை இயற்சொல்

67. **விடை: A**

- செந்தமிழ் நிலத்து வழங்கும் சொல்லாகிக் கற்றோர்க்கும் கல்லாதார்க்கும் ஒரே தன்மையாய்ப் பொருள் தரும் தன்மையுடைய சொல் இயற்சொல்லாகும்.
- இயற்சொல் என்பது இயல்பாகப் பொருள் உணரும் சொல்லாகும்.
- எல்லாருக்கும் பொருள் விளங்கும்வகையில் இயல்பாய் அமைந்த தமிழ்ச்சொல் இயற்சொல் எனப்படும்

68. **விடை: A**

- தமிழ் முனிவராகிய அகத்தியரும் பாண்டிய மன்னர்களும் சங்கப் புலவர்களும் இருந்து தமிழ் வளர்த்த இடம் என்பதால் பாண்டிய நாடு செந்தமிழ் நிலம் எனப்படும்

69. **விடை: B**

- வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்று எனப்படும்.
- இவ்வினைமுற்று இரு திணைகளையும் (உயர்திணை, அஃறிணை) ஐந்து பால்களையும் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன் பால், பலவின் பால்) மூன்று இடங்களையும் (தன்மை, முன்னிலை, படர்க்கை) காட்டும்.
- இதன் விகுதிகள் **க, இய, இயர், அல்** என வரும்.

(எ.கா.)

- வாழ்க, ஒழிக, வாழியர், வாரல்

- விதித்தல் பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று, தன்மை இடத்தில் வராது.
- இயர், அல் ஆகிய இரண்டு விகுதிகள் தற்கால வழக்கில் இல்லை. செய்யுள் வழக்கில் மட்டுமே உள்ளன

70. **விடை: C**

- **உண்டோம்** என்பது தன்மைப் பன்மை வினைமுற்று.
  - உண்+ட்+ஓம்
  - இச்சொல்லில் உண் என்பது வினைப்பகுதி
  - **ஓம்** என்பது விகுதி.
- ட் என்பது இறந்தகால இடைநிலை. இச்சொல்லிலும் ஓம் என்னும் விகுதியால் அறியப்படுவன இரண்டு செய்திகள்

SHANKAR IAS ACADEMY

71. **விடை: A**

- குறிப்பு வினை என்பது தெரிநிலை வினையைப் போல் வெளிப்படையாகக் காலம் காட்டாது. பேசுவோர் கேட்போர் குறிப்புக்கு ஏற்ப அது காலங்காட்டுவதாகும்.
- காலம் காட்டும் இடைநிலைகள் குறிப்பு வினைமுற்றுச் சொற்களில் இடம் பெறுவதில்லை
  - **நான் கரியென் – என்**
- இவை எவ்வாறு குறிப்பு வினைமுற்றுகள் ஆகின்றன? நான் கரியென் (நான் கரியவன்) எனும் தொடரில் வரும் 'கரியென்' என்பதன் பொருள் 'கரியவனாக இருக்கிறேன்' என்றோ, கரியவனாக இருந்தேன்' என்றோ 'கரியவனாக இருப்பேன்' என்றோ வரும்.

72. **விடை: C**

- 'த்' இறந்த காலத்தையும், 'கிறு' நிகழ்காலத்தையும், 'வ்' எதிர்காலத்தையும் உணர்த்துகின்றன

73. **விடை: B**

(சொல்) (எதிர்ச்சொல்)

- மருள் × தெருள்

74. **விடை: D**

- அனைத்தும் சரி

75. **விடை: C**

- போற்றினர் × தூற்றினர்
- வாழ்த்தினர் × வைதனர் / சபித்தனர்
- புகழ்ந்தனர் × இகழ்ந்தனர்
- கனிந்தனர் × கடிந்தனர் / சினந்தனர்

76. **விடை: C**

- வெம்மை × தண்மை
- மெய்ம்மை × பொய்ம்மை
- மென்மை × வன்மை / திண்மை
- பெண்மை × ஆண்மை

77. **விடை: B**

- மேன்மை × கீழ்மை
- முந்தி × பிந்தி
- அடைக்கும் × திறக்கும்
- மடமை × புலமை

78. **விடை: B**

- ஊசியில் நூலைக் கோத்தான்
- பூக்களை நன்றாகத் தொடுத்தான்

SHANKAR IAS ACADEMY

79. **விடை: C**

- அங்கே நிற்பது என் நண்பன் அல்லன் ;
- அங்குள்ள புத்தகங்கள் என்னுடையவை அல்ல

80. **விடை: B**

81. **விடை: D**

- ஓர் ஊரில் அரசன் ஒருவன் இருந்தான்.

82. **விடை: A**

பிழை	சரி
அருகாமை	அருகில், அண்மையில்
அக்கரை	கவனம், ஈடுபாடு (அக்கரையென்பது அந்தக் கரை எனப் பொருள்படும்)

83. **விடை: A**

- படை - சேனை;கல்லணை (பெயர்ச்சொல்) ,உண்டாக்கு(வினைச்சொல்)
- நூறு - அழி(வினைச்சொல்)
- பரசு - மழு (பெயர்ச்சொல்) , துதி(வினைச்சொல்)

84. **விடை: C**

- பணை - மூங்கில்; வயல்; முரசு (பெயர்ச்சொல்), பருக்கச்செய் (வினைச்சொல்)

85. **விடை: A**

- நுதல் - நெற்றி, புருவம்
- காலம், நிமிடம்: இவை நேரத்தைக் குறிக்கும் சொற்கள்.
- ஆசை, விருப்பம்: ஆவல், ஆர்வம், அவா, பற்று போன்ற சொற்கள் பயன்படுகின்றன.
- முகம்- வடிவம், மதி,வதனம் திருமுகம்
- கண்கள்- நயனம், விழி' என்றும் பொருள்கள் உண்டு

86. **விடை: D**

- வட்டி-முதலின் ஊதியம் (பெயர்ச்சொல்லின் பொருள்),
- பரிமாறு(வினைச்சொல்லின் பொருள்)

87. **விடை: D**

- பூரி என்ற சொல்லின் பெயர்ச்சொல் கலப்புநெல்,பொன்
- புனை, பூ சொல்லின் பெயர்ச்சொல் அழகு

88. **விடை: A**

- மை - கறுப்பு, ஆடு; நீர்

SHANKAR IAS ACADEMY

89. **விடை: B**

மரபுத்தொடர்		பொருள்
➢ அவசரக்குடுக்கை	-	எண்ணித் துணியாதார்
➢ பஞ்சாய்ப் பறத்தல்	-	அலைந்து திரிதல்
➢ குட்டிச்சுவர்	-	பயனின்றி இருந்தல்
➢ கொட்டியளத்தல்	-	மிகுதியாகப் பேசுதல்

90. **விடை: B**

➢ ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது	-	பட்டறிவில்லாத படிப்பறிவு
➢ அவலை நினைத்து உரலை இடித்தல்	-	எண்ணமும் செயலும் ஒத்துவராமை
➢ எடுப்பார் கைப்பிள்ளை	-	தன் சிந்தனையின்றிச் சொல்பவர் பேச்சைக் கேட்டு நடப்பவர்
➢ ஆயிரங் காலத்துப் பயிர்	-	நீண்ட காலத்திற்குரியது

91. **விடை: D**

- ➢ ஆனம், அகவிலை, திறவுகோல் முதலிய சொற்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர்ச் சிற்றூர்களில் இயல்பாகப் பேசப்பட்டவை.
- ➢ அவை இன்று மறைந்து வருகின்றன. இவற்றைச் சொலவடைகள் என மக்கள் சொல்வார்கள்
- ➢ கோழியக் கேட்டா ஆனம் காச்சுவாங்க... (ஆனம் – குழம்பு)
- ➢ அளக்குற நாழிக்கு அகவிலை தெரியுமா?
- ➢ (நாழி – தானியங்களை அளக்கும் படி; அகவிலை – தானியவிலை)

92. **விடை: B**

- ➢ கொழும்பில கூடாரம் மதுரையில கூடாரம் (கூடாரம் இடுவது என்றால் தங்குவது என்று பொருள்.)

93. **விடை: C**

- ➢ கம்பி நீட்டல் - சொல்லிக்கொள்ளாமல் செல்லல்.

94. **விடை: B**

- ➢ சுவரை வைத்துத்தான் சித்திரம் வரையவேண்டும் என்பதை உணர்த்த மருத்துவர், நோயாளிடம் “உடல் நலனே, அனைத்து நலன்களுக்கும் அடிப்படை” என்கிறார்.

95. **விடை: C**

- ➢ அடை மழை விட்டாலும் செடி மழை விடாது.

96. **விடை: B**

- ➢ அவப்பொழுது - வீணாகக் கழிக்கும் காலம்.
- ➢ தவப்பொழுது: நல்ல காரியங்களுக்காகவும், இறை சிந்தனைக்காகவும், அறிவை வளர்ப்பதற்காகவும் பயன்படுத்தும் நல்ல நேரம் ஆகும்.

SHANKAR IAS ACADEMY

97. **விடை: B**

- நாம் செய்திகளையும் கருத்துகளையும் பிறரிடம் கூறும்பொழுது, திறம்பட, சுவைபடக் கூறுவதற்காக, ஒரே பொருள்தரும் இருசொற்களைப் பயன்படுத்துவது உண்டு.
- அவை நேர் இணைச்சொற்கள் / நேரிணை எனப்படும். (எ.கா.) காந்தியடிகள் ஈடு இணையற்ற தலைவராய்த் திகழ்ந்தார்
- எதிரான கருத்தைக் கூறும்பொழுது எதிர்ப்பொருள் தரும் சொற்களைப் பயன்படுத்துதல் எதிர் இணைச்சொற்கள் / எதிரிணை எனப்படும். (எ.கா.) மலர்க்கொடியின் தந்தை அல்லும்பகலும் அயராது உழைத்தவர்
- பொருளின் செறிவைக் குறித்து வருவன செறியிணை எனப்படும்.
  - (எ.கா.) பச்சைப்பசேல், வெள்ளைவெளேர்

98. **விடை: B**

- காவேரி கண்ணுங்கருத்துமாகப் படித்தாள், நம் நாட்டில் ஓங்கி உயர்ந்த மலைகள் உள்ளன – நேரிணைச் சொற்கள்
- விளையாட்டுத்திடல் மேடு பள்ளம் உடையதாய் இருந்தது – எதிரிணைச் சொற்கள்

99. **விடை: D**

- **விலங்குகளின் வாழிடங்கள்**
  - ஆட்டுப்பட்டி
  - கோழிப்பண்ணை
  - யானைக்கூடம்
  - குதிரைக்கொட்டில்
  - மாட்டுத்தொழுவம்
  - வாத்துப்பண்ணை

100. **விடை: D**

- **தாவர உறுப்புப் பெயர்கள்**
  - ஈச்ச ஓலை
  - முருங்கைக்கீரை
  - தாழை மடல்
  - பனையோலை
  - தென்னையோலை
  - தென்னங்கீற்று
  - பலாஇலை மாவிலை
  - மூங்கில் இலை
  - வாழைஇலை
  - வேப்பந்தழை
  - கமுகங்கூந்தல்
  - நெற்றாள்
  - சோளத்தட்டு/தட்டை

SHANKAR IAS ACADEMY

101. **விடை: B**

<u>திணை வழுவமைதி</u>

- "என் அம்மை வந்தாள்" என்று மாட்டைப் பார்த்துக் கூறுவது திணைவழுவமைதி ஆகும். இங்கு உவப்பின் காரணமாக அஃறிணை, உயர்திணையாகக் கொள்ளப்பட்டது.

102. **விடை: B**

	வழு	வழாநிலை
திணை	செழியன் வந்தது	செழியன் வந்தான்
பால்	கண்ணகி உண்டான்	கண்ணகி உண்டாள்
இடம்	நீ வந்தேன்	நீ வந்தாய்
காலம்	நேற்று வருவான்	நேற்று வந்தான்
வினா	ஒரு விரலைக் காட்டிச் சிறியதோ? பெரியதோ? என்று கேட்டல்	இரு விரல்களைக் காட்டி எது சிறியது? எது பெரியது? என்று கேட்டல்
விடை	'கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்குக் **கண்ணாடி பைக்குள் இருக்கிறது** என்று விடையளித்தல்	கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்குக் **கண்ணன் வீட்டிற்குள் இருக்கிறார்** என்று விடையளித்தல்
மரபு	தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் **தென்னந்தோட்டம்** என்று கூறுதல்	தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் **தென்னந்தோப்பு** என்று கூறுதல்

103. **விடை: C**

<u>பால் வழுவமைதி</u>

- "வாடா இராசா, வாடா கண்ணா" என்று தன் மகளைப் பார்த்துத் தாய் அழைப்பது பால்வழுவமைதி ஆகும். இங்கு உவப்பின் காரணமாகப் பெண்பால், ஆண்பாலாகக் கொள்ளப்பட்டது.

104. **விடை: B**

<u>இட வழுவமைதி</u>

- மாறன் என்பான் தன்னைப்பற்றிப் பிறரிடம் கூறும்போது,"இந்த மாறன் ஒருநாளும் பொய் கூறமாட்டான்" என. தன்மையினைப் படர்க்கை இடத்தில் கூறுவது இடவழுவமைதி ஆகும்.

105. **விடை: B**

	வழு	வழாநிலை
திணை	செழியன் வந்தது	செழியன் வந்தான்
பால்	கண்ணகி உண்டான்	கண்ணகி உண்டாள்
இடம்	நீ வந்தேன்	நீ வந்தாய்
காலம்	நேற்று வருவான்	நேற்று வந்தான்

SHANKAR IAS ACADEMY

வினா	ஒரு விரலைக் காட்டிச் சிறியதோ? பெரியதோ? என்று கேட்டல்	இரு விரல்களைக் காட்டி எது சிறியது? எது பெரியது? என்று கேட்டல்
விடை	'கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்குக் **கண்ணாடி பைக்குள் இருக்கிறது** என்று விடையளித்தல்	கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்குக் **கண்ணன் வீட்டிற்குள் இருக்கிறார்** என்று விடையளித்தல்
மரபு	தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் **தென்னந்தோட்டம்** என்று கூறுதல்	தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் **தென்னந்தோப்பு** என்று கூறுதல்

106. **விடை: D**

	வழு	**வழாநிலை**
திணை	செழியன் வந்தது	செழியன் வந்தான்
பால்	கண்ணகி உண்டான்	கண்ணகி உண்டாள்
இடம்	நீ வந்தேன்	நீ வந்தாய்
காலம்	நேற்று வருவான்	நேற்று வந்தான்
வினா	ஒரு விரலைக் காட்டிச் சிறியதோ? பெரியதோ? என்று கேட்டல்	இரு விரல்களைக் காட்டி எது சிறியது? எது பெரியது? என்று கேட்டல்
விடை	'கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்குக் **கண்ணாடி பைக்குள் இருக்கிறது** என்று விடையளித்தல்	கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்குக் **கண்ணன் வீட்டிற்குள் இருக்கிறார்** என்று விடையளித்தல்
மரபு	தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் **தென்னந்தோட்டம்** என்று கூறுதல்	தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் **தென்னந்தோப்பு** என்று கூறுதல்

107. **விடை: C**

வழுவமைதி

- இலக்கணமுறைப்படி பிழையுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது வழுவமைதியாகும்.

108. **விடை: C**

(ஆங்கிலச்சொல்) (தமிழ்ச்சொல்)

- Whatsapp - புலனம்
- Skype - இசுகை
- Blogspot - வலைப்பூ
- Twitter - கீச்சகம்
- Browser - உலவி

SHANKAR IAS ACADEMY

109. **விடை: C**

விசைப்பலகை	**Keyboard**
குறும்பரப்பு வலைப்பின்னல்	LAN– Local Area Network
இணக்கி	Modem
பின்னணி	Setting
இடைமுக அட்டை	Network Interface
இயங்குதளம்	Operating System
ஒளி வழி எழுத்தறிவான்	Optical Character Recognizer

110. **விடை: B**

(ஆங்கிலச்சொல்) **(தமிழ்ச்சொல்)**

- Allegory - உள்ளுறை உவமம்
- Signifier - குறிப்பீடு
- Affidavnt - ஆணையுறுதி ஆவணம்
- Font - எழுத்துரு

111. **விடை: A**

- 'Beat Reporter' என்பது 'செய்திக்கள நிருபர்' என அழைக்கப்படுகிறது.
- 'Filler' என்பதன் கலைச்சொல் 'துண்டுச் செய்திகள்' என்பதாகும்.
- Green Proof' என்பதன் தமிழாக்கம் 'திருத்தப்படாத அச்சுப்படி' என்பதாகும்.

112. **விடை: C**

(ஆங்கிலச்சொல்) **(தமிழ்ச்சொல்)**

- Hyperbole - உயர்வு நவிற்சி
- Metonymy - ஆகுபெயர்
- Introspection - அகக்காட்சி
- Dialectics - முரணியாக்கம்
- Irony - வஞ்சப்புகழ்ச்சி

113. **விடை: C**

(ஆங்கிலச்சொல்) **(தமிழ்ச்சொல்)**

- Encoding - குறியேற்றம்
- Interface Tool - தட்டச்சு இடைமுகச் செயலி
- URL - சுருகக்கோப்பு
- Zip file - சீரான வள இடங்காட்டி

SHANKAR IAS ACADEMY

114. **விடை: C**

(ஆங்கிலச்சொல்) (தமிழ்ச்சொல்)

- Rhetorics - அணியியல்
- Meta language - மேநிலைமொழி
- Existentialism - இருத்தலியம்
- Romanticism - கற்பனாவாதம்
- Axiology - விழுமியவியல்

115. **விடை: C**

- குறும்பரப்பு வலைப்பின்னல் - LAN
- தரவு மாற்றத் தொழில்நுட்பம் - Pocket Switching Technology
- சீரான வள இடங்காட்டிகள் - Uniform Resource Locator
- இயங்கு இணையதளம் - Dynamic website

116. **விடை: B**

- 'Soliloquies' மற்றும் 'Parody' ஆகிய ஆங்கிலச் சொற்களுக்குரிய சரியான தமிழ்க் கலைச்சொற்கள் முறையே தனிமொழி, பகடி

117. **விடை: D**

- "எழுத்து – பேச்சு மாற்றி" என்பதன் ஆங்கிலக் கலைச்செல் Text to Speech ஆகும்.
- 'செய்திப் பரிமாற்றத் தொழில்நுட்பம்' என்பதன் ஆங்கிலக் கலைச்செல் Transmission Control program ஆகும்.

118. **விடை: B**

- தமிழர் நாகரிக வளர்ச்சியில் சிற்பம் கல்லில் வடித்த கவிதைகள் எனலாம். கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் அமைக்கும் கலையே சிற்பக்கலை. சிற்பக்கலை பற்றி திவாகர நிகண்டு, மணிமேகலை போன்றவற்றில் குறிப்புகள் காணப்படுகின்றன. பல்லவர் காலத்து தூண்களில் சிங்கம், யாளி, தாமரை மலர் போன்ற சிற்பங்கள் இருந்தன. திருச்சி மலைக்கோட்டை, மாமல்லபுரம், காஞ்சிபுரம் போன்ற இடங்களில் பல்லவர் கால சிற்பம் கலை நுட்பத்துடன் அமைந்துள்ளன. பல்லவர் கால குடைவரைக் கோவில்களில் நுழைவாயில் இரு புறங்களிலும் காவலர் நிற்பது போன்ற சிற்பங்கள் படைக்கப்பட்டன.

119. **விடை: A**

- தமிழர் நாகரிக வளர்ச்சியில் சிற்பம் கல்லில் வடித்த கவிதைகள் எனலாம். கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் அமைக்கும் கலையே சிற்பக்கலை. சிற்பக்கலை பற்றி திவாகர நிகண்டு, மணிமேகலை போன்றவற்றில் குறிப்புகள் காணப்படுகின்றன. பல்லவர் காலத்து தூண்களில் சிங்கம், யாளி, தாமரை மலர் போன்ற சிற்பங்கள் இருந்தன. திருச்சி மலைக்கோட்டை, மாமல்லபுரம், காஞ்சிபுரம் போன்ற இடங்களில் பல்லவர் கால சிற்பம் கலை நுட்பத்துடன் அமைந்துள்ளன. பல்லவர் கால குடைவரைக் கோவில்களில் நுழைவாயில் இரு புறங்களிலும் காவலர் நிற்பது போன்ற சிற்பங்கள் படைக்கப்பட்டன.

SHANKAR IAS ACADEMY

120. **விடை: B**

- தமிழர் நாகரிக வளர்ச்சியில் சிற்பம் கல்லில் வடித்த கவிதைகள் எனலாம். கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் அமைக்கும் கலையே சிற்பக்கலை. சிற்பக்கலை பற்றி திவாகர நிகண்டு, மணிமேகலை போன்றவற்றில் குறிப்புகள் காணப்படுகின்றன. பல்லவர் காலத்து தூண்களில் சிங்கம், யாளி, தாமரை மலர் போன்ற சிற்பங்கள் இருந்தன. திருச்சி மலைக்கோட்டை, மாமல்லபுரம், காஞ்சிபுரம் போன்ற இடங்களில் பல்லவர் கால சிற்பம் கலை நுட்பத்துடன் அமைந்துள்ளன. பல்லவர் கால குடைவரைக் கோவில்களில் நுழைவாயில் இரு புறங்களிலும் காவலர் நிற்பது போன்ற சிற்பங்கள் படைக்கப்பட்டன.

121. **விடை: A**

- தனி வாக்கியம் என்பது ஓர் எழுவாய், ஒரு பயனிலை, ஒரு செயப்படுபொருள் அமைந்து நிற்கும் சொற்றொடராகும். செயப்படு பொருளின்றியும் சில வாக்கியங்கள் அமைந்திருக்கும்.
  - அழகன் பாடம் எழுதுகிறான்.
  - **மா, பலா, வாழை** ஆகியன முக்கனிகள்.
- இத்தொடர்களில் முதல் தொடரில் அழகன் என்பது எழுவாய். இரண்டாம் தொடரில் மா, பலா, வாழை என்பன எழுவாய்கள்.
- இவ்வாறாக, ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டுமுடிவது, தனிநிலைத்தொடர்.
- **(எ.கா.)**
  - **இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.**
  - **வீரன் யானையைக் கொன்றான்.**
  - **பூனை பாலைக் குடித்தது.**
- வைகறைத் துயிலெழு – எழுவாய் இல்லாத தனி வாக்கியம்
- வீமன் வேற்றூர் சென்றான். – செயப்படு பொருள் இல்லாத தனி வாக்கியம்.

122. **விடை: B**

- பனாதி - ஆதரவற்றவர்
- சமஸ்தானம் - அரசு
- கஜானா - கருவூலம்
- சிபாரிசு - பரிந்துரை

123. **விடை: B**

சுவிட்ச்	**சொடுக்கி**
ஐஸ்வாட்டர்	குளிர்நீர்
கூல் ட்ரிங்ஸ்	குளிர்சாறுகள்
கிரைண்டர்	மின்அரைவை
பிரிஜ்	குளிரூட்டும்பெட்டி
டீ	தேநீர்
வாஷிங்மெஷின்	வெளுக்கை இயந்திரம்
டெலிபோன்	தொலைபேசி

SHANKAR IAS ACADEMY

124. **விடை: C**

(பிறமொழிச்சொல்) **(தமிழ்ச்சொல்)**

- பிரதானம் - முதன்மை
- அபாயம் - பேரிடர்
- கர்வம் - செருக்கு
- கைதி - சிறையாளி

125. **விடை: C**

ஏரோப்பிளேன்	**வானூர்தி**
கஜானா	கருவூலம்
இலாகா	துறை
உத்தியோகஸ்தர்	அலுவலர்
அப்பாயிண்ட்	பணிஅமர்த்தல்
டிபார்ட்மெண்டல் ஸ்டோர்	பலபொருள் அங்காடி

126. **விடை: C**

(பிறமொழிச்சொல்) **(தமிழ்ச்சொல்)**

- கேபிள் - கம்பிவடம்
- செக் - காசோலை
- பைண்டிங் - கட்டமைப்பு
- பெஞ்ச்சு - விசிப்பலகை
- உபாத்தியாயர் - ஆசிரியர்

127. **விடை: C**

விபூதி	திருநீறு
விவாதம்	உரையாடல்
வைத்தியர்	மருத்துவர்

128. **விடை: A**

- தனி வாக்கியம் என்பது ஓர் எழுவாய், ஒரு பயனிலை, ஒரு செயப்படுபொருள் அமைந்து நிற்கும் சொற்றொடராகும். செயப்படு பொருளின்றியும் சில வாக்கியங்கள் அமைந்திருக்கும்.
  - அழகன் பாடம் எழுதுகிறான்.
  - மா, பலா, வாழை ஆகியன முக்கனிகள்.
- இத்தொடர்களில் முதல் தொடரில் **அழகன்** என்பது எழுவாய். இரண்டாம் தொடரில் மா, பலா, வாழை என்பன எழுவாய்கள்.
- இவ்வாறாக, ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டுமுடிவது, **தனிநிலைத்தொடர்.**

SHANKAR IAS ACADEMY

(எ.கா.)

- **இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.**
- **வீரன் யானையைக் கொன்றான்.**
- **பூனை பாலைக் குடித்தது.**

➢ வைகறைத் துயிலெழு – எழுவாய் இல்லாத தனி வாக்கியம்

➢ வீமன் வேற்றூர் சென்றான் – செயப்படு பொருள் இல்லாத தனி வாக்கியம்.

129. **விடை: C**

➢ அழகன் பாடம் எழுதுகிறான்.

➢ மா, பலா, வாழை ஆகியன முக்கனிகள்.

➢ இத்தொடர்களில் முதல் தொடரில் **அழகன்** என்பது எழுவாய். இரண்டாம் தொடரில் **மா, பலா, வாழை** என்பன எழுவாய்கள்.

130. **விடை: B**

<u>கலவைத்தொடர்</u>

➢ **(எ.கா.)**

- நேற்று புயல் வீசியதால், பள்ளிக்கு விடுமுறை.
- முருகன், இரவும் பகலும் அயராது படித்ததால் கூடுதல் மதிப்பெண்கள் பெற்றான்.
- தீண்டாமைத் தீயை நாட்டை விட்டு ஓட்டுவது நம் கடமை.

➢ **<u>தொடர்நிலைத்தொடர்</u>**

➢ உழவன் நிலத்தை உழுது, விதை விதைத்து, நீர்ப்பாய்ச்சி, உரமிட்டு, அறுவடை செய்தான் – தொடர் வாக்கியம்.

➢ இத்தொடரில் உழவன் எனும் ஓர் எழுவாய் உழுது, விதைத்து, பாய்ச்சி, உரமிட்டு என்னும் வினையெச்சங்களைப் பெற்று, செய்தான் எனும் வினைமுற்றைக் கொண்டு முடிந்துள்ளது. ஆதலால் இது தொடர் வாக்கியமாகும்.

➢ **(எ.கா.)**

- கார்மேகம் கடுமையாக உழைத்தார்; அதனால், வாழ்வில் உயர்ந்தார்.
- நேற்று மழை பெய்தது; அதனால், ஏரி குளங்கள் நிரம்பின.
- இவ்வாறு, **ஓர் எழுவாய் பல பயனிலைகளைக்கொண்டு முடிவது தொடர்நிலைத்தொடர்.**
- தொடர்நிலைத்தொடர்கள் அதனால், ஆகையால், ஏனெனில் முதலிய இணைப்புச்சொற்களைப் பெற்று வரும்.

➢ **<u>தனிநிலைத்தொடர்</u>**

➢ ஓர் எழுவாய் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டுமுடிவது, தனிநிலைத்தொடர்.

➢ **(எ.கா.)**

- **இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார்.**
- **வீரன் யானையைக் கொன்றான்.**
- **பூனை பாலைக் குடித்தது.**

SHANKAR IAS ACADEMY

131. **விடை: B**

- **கலவை வாக்கியம்**
  - கடைக்குப் போனால், நல்ல பழங்களை வாங்கி வருவேன்.
- **தொடர் வாக்கியம்**
  - கடைக்குப் போவேன், நல்ல பழங்களை வாங்கி வருவேன்.
- **தனி வாக்கியம்**
  - நான் கடைக்குப் போவேன்; நான் நல்ல பழங்களை வாங்கி வருவேன்.

132. **விடை: D**

கலவைத்தொடர்

- ஒரு தனிச்சொற்றொடர் ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட துணைத் தொடர்களுடன் கலந்து வருவது, கலவைத்தொடர்.
- நீ தமிழில் மாநிலத்திலேயே முதல் மதிப்பெண் பெற்றதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.
- இதில் 'நான் மகிழ்ச்சி யடைகிறேன்' என்பது பொருள் முடிவு பெற்ற முதன்மை வாக்கியம். 'நீ தமிழில் மாநிலத்திலேயே முதல் மதிப்பெண் பெற்றதற்காக' என்பது பொருள் முடிவு பெறாது முதன்மை வாக்கியத்தைச் சார்ந்து நிற்கும் சார்பு வாக்கியமாகும்.
- இங்ஙனம் ஒரு முதன்மை வாக்கியத்துடன் ஒன்று அல்லது பல சார்பு வாக்கியங்கள் இணைந்து வருவது கலவை வாக்கியமாகும்.

133. **விடை: C**

கலவைத்தொடர்

- 'ஆண் மக்களே! பெண்ணினத்திற்கு மதிப்புக் கொடுங்கள்; உரிமை கொடுங்கள்; அதுவே நாகரிகம்" என்று திரு.வி.க. கூறுவார்.
- இத்தொடரில் திரு.வி.க. கூறுவார் என்பது முதன்மை வாக்கியம்; பெண்ணினத்திற்கு மதிப்புக் கொடுங்கள்; உரிமை கொடுங்கள், அதுவே நாகரிகம் என்பன சார்பு வாக்கியங்கள்.
- இவ்வாறு ஒரு முதன்மை வாக்கியத்துடன் பல சார்பு வாக்கியங்கள் இணைந்து வருவதும் உண்டு.

134. **விடை: C**

தொடர்நிலைத்தொடர்

- தொடர் வாக்கியம் என்பது ஒரு எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடிந்தும், பல வினைச்சங்களைக் கொண்டு இறுதியில் வினைமுற்றைக் கொண்டும் முடிந்து வரும்.
- அத்துடன் தகுந்த இணைப்புச் சொற்களைக் கொண்டும் முடிந்துவரும்.

135. **விடை: C**

- உழவன் நிலத்தை உழுது, விதை விதைத்து, நீர்ப்பாய்ச்சி, உரமிட்டு, அறுவடை செய்தான் – தொடர் வாக்கியம்.
- **இத்தொடரைப் பல தனி வாக்கியங்களாகப் பிரிக்கலாம்.**
  - உழவன் நிலத்தை உழுதான்.
  - உழவன் விதை விதைத்தான்.
  - உழவன் நீர் பாய்ச்சினான்.
  - உழவன் உரமிட்டான்.

SHANKAR IAS ACADEMY

136. **விடை: A**

- கலவை வாக்கியம் ஒரு முதன்மை வாக்கியத்துடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சார்பு வாக்கியங்கள் இணைந்து வரும்.
- 'அதனால், ஆகையால், ஏனெனில்' போன்ற இணைப்புச் சொற்கள் தொடர் வாக்கியங்களில் மட்டுமே இடம்பெறும்.

137. **விடை: B**

<u>தொடர்நிலைத்தொடர்</u>

- தொடர் வாக்கியம் என்பது ஒரு எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடிந்தும், பல வினைச்சங்களைக் கொண்டு இறுதியில் வினைமுற்றைக் கொண்டும் முடிந்து வரும்.
- அத்துடன் தகுந்த இணைப்புச் சொற்களைக் கொண்டும் முடிந்துவரும்.
- **(எ.கா.)**
  - காவிரிப்பூம்பட்டினம் ஒரு காலத்தில் கடற்கரைத் துறைமுகமாக விளங்கியது: இன்று அழிந்து கிடக்கிறது.
  - கரிகாற் பெருவளத்தான் வீரன் மட்டும் அல்லன்; சிறந்த நீதிமானாகவும் விளங்கினான்; காவிரிக்குக் கரை எழுப்பினான்.

138. **விடை: B**

- பூனை பாலைக் குடித்தது – தனி வாக்கியம்
- தீண்டாமைத் தீயை நாட்டை விட்டு ஒழிப்பது நம் கடமை – கலவைத் வாக்கியம்
- நாகம் இடியோசையைக் கேட்டது, அதனால் நடுங்கியது – தொடர் வாக்கியம்

139. **விடை: D**

- ஔவையார் அதியமானிடம் சென்றார்; அவன் தந்த உணவை உண்டார்; களைப்பு நீங்கினார்; அவனை வாழ்த்தினார்.
- இதுவும் தொடர் வாக்கியமே ஆகும். இதில் ஓர் எழுவாய் பல பயனிலைகளைப் பெற்றுத் தொடர்பு கொண்டதாக உள்ளது.
  - ஔவையார் அதியமானிடம் சென்றார்.
  - அவர் அவன் தந்த உணவை உண்டார்.
  - அவர் களைப்பு நீங்கினார்.
  - அவர் அவனை வாழ்த்தினார் – தனி வாக்கியங்களாயின.

140. **விடை: C**

- ஒரு முதன்மை வாக்கியத்துடன் ஒன்று அல்லது பல சார்பு வாக்கியங்கள் இணைந்து வருவது கலவை வாக்கியமாகும்.
- **(எ.கா.)**
  - நேற்று புயல் வீசியதால், பள்ளிக்கு விடுமுறை.
  - முருகன், இரவும் பகலும் அயராது படித்ததால் கூடுதல் மதிப்பெண்கள் பெற்றான்.
  - தீண்டாமைத் தீயை நாட்டை விட்டு ஓட்டுவது நம் கடமை.

SHANKAR IAS ACADEMY

141. **விடை: A**

- **<u>பொருள்மாறா எதிர்மறைத்தொடர்</u>**
  - கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள்.
  - கலைச்செல்வி கட்டுரை கட்டுரை எழுதினாள் என்னும் தொடர் உடன்பாட்டுத்தொடர்.
  - கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை என்பது இதற்கான எதிர்மறைத்தொடர்.
- மேலே உள்ள உடன்பாட்டுத்தொடரை பொருள்மாறா எதிர்மறைத்தொடராக மாற்ற வேண்டுமானால், அதனை இரண்டு எதிர்மறைகளைக்கொண்ட தொடராகக், கலைச்செல்வி கட்டுரை எழுதாமல் இராள் என மாற்றுதல்வேண்டும்.
- இதற்குக் கலைச்செல்வி கட்டுரை எழுதினாள் என்பதே பொருள் என்பதனால், இது **பொருள்மாறா எதிர்மறைத்தொடர்** எனப்படுகிறது.
- இரண்டு எதிர்மறைச்சொற்கள் சேர்ந்து வந்தால், அ஼்து உடன்பாட்டுப் பொருளைத் தரும்.

142. **விடை: B**

<u>செய்வினைத்தொடர்</u>

- எழுவாய், செய்படுபொருள், பயனிலை என்று வரிசையில் வாக்கியம் அமைதல் செய்வினை வாக்கியம் எனப்படும்.
- செயபடுபொருளோடு ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு சேர்ந்து வரும். (“ஐ” உருபு மறைந்தும், வெளிப்பட்டும் வரும்).

143. **விடை: D**

உடன்பாட்டுத்தொடர்

- செயல் அல்லது தொழில் நிகழ்வதை நேர்மறையாக உணர்த்துவது, உடன்பாட்டுத் தொடர்.
- **(எ.கா.)**
  - கலைச்செல்வி கட்டுரை எழுதினாள்.
  - தமிழரசி புதுவைக்குச் சென்றாள்.
  - இனியன் உணவு உண்டான்.

<u>எதிர்மறைத்தொடர்</u>

- கலைச்செல்வி கட்டுரை எழுதிலள்.
- இத்தொடரில், கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை எனச் செயல் நிகழாமையைக் கூறுவதனால், இ஼்து எதிர்மறைத்தொடர்.
- **(எ.கா.)**
  - தமிழரசி புதுவைக்குச் சென்றிலள்.
  - இனியன் உணவு உண்டிலன்.

144. **விடை: D**

- உடன்பாட்டுத் தொடர் - தமிழரசி புதுவைக்குச் சென்றாள்
- எதிர்மறைத் தொடர் - தமிழரசி புதுவைக்குச் சென்றிலள்
- பொருள்மாறா எதிர்மறைத் தொடர் - தமிழரசி புதுவைக்குச் செல்லாமல் இராள்
- செய்வினைத் தொடர் - மாவட்ட ஆட்சியர் கொடி ஏற்றினார்

SHANKAR IAS ACADEMY

145. **விடை: D**

உடன்பாட்டுத்தொடர்

- செயல் அல்லது தொழில் நிகழ்வதை நேர்மறையாக உணர்த்துவது, உடன்பாட்டுத் தொடர்.

(எ.கா.)

- கலைச்செல்வி கட்டுரை எழுதினாள்.
- தமிழரசி புதுவைக்குச் சென்றாள்.
- இனியன் உணவு உண்டான்.

எதிர்மறைத்தொடர்

- கலைச்செல்வி கட்டுரை எழுதிலள்.
- இத்தொடரில், கலைச்செல்வி கட்டுரை எழுதவில்லை எனச் செயல் நிகழாமையைக் கூறுவதனால், இ◌ாது எதிர்மறைத்தொடர்.
- **(எ.கா.)**
  - தமிழரசி புதுவைக்குச் சென்றிலள்.
  - இனியன் உணவு உண்டிலன்.

146. **விடை: C**

- 'மாவட்ட ஆட்சியர் கொடி ஏற்றினார்' இத்தொடரில் மறைந்து வந்துள்ள வேற்றுமை உருபு - இரண்டாம் வேற்றுமை உருபு

147. **விடை: C**

செய்வினைத்தொடர்

- எழுவாய், செய்படுபொருள், பயனிலை என்று வரிசையில் வாக்கியம் அமைதல் செய்வினை வாக்கியம் எனப்படும்.
- செயபடுபொருளோடு ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு சேர்ந்து வரும். ("ஐ" உருபு மறைந்தும், வெளிப்பட்டும் வரும்).
- "குடியரசுத் தலைவர் உலகத் தமிழ் மாநாட்டைத் தொடங்கிவைத்தார்." இத்தொடரில்,
  - குடியரசுத் தலைவர் – எழுவாய்
  - உலகத் தமிழ் மாநாடு – செயப்படுபொருள்
  - தொடங்கிவைத்தார் – பயனிலை
- இவ்வாறாக **எழுவாய், செய்யும் வினையைக் கொண்டு முடியும் தொடர் செய்வினைத் தொடர்** எனப்படும்.
- செயப்படுபொருளோடு **இரண்டாம் வேற்றுமை உருபு** (ஐ) வெளிப்பட்டு வரும். சில தொடர்களில் மறைந்தும் வரும்.

148. **விடை: D**

- 'Special buses will be run' என்பதற்குச் 'தனிப் பேருந்துகள் விடப்படும்' என்று மொழி பெயர்ப்பதே முற்றிலும் சரியானது.
- 'Citizenship Training' என்ற ஆங்கிலச் சொற்றொடரின் பொருத்தமான தமிழ் மொழிபெயர்ப்பு 'குடிமைப் பயிற்சி' என்பதாகும்.
- 'Under his chairmanship' என்ற சொற்றொடருக்கு **'அவரது தலைமையில்'** என மொழிபெயர்ப்பதே தமிழ் மரபுக்கு ஏற்றது.

SHANKAR IAS ACADEMY

149. **விடை: A**

- 'Don't be beating about the bush' என்ற சொற்றொடருக்கான தமிழாக்கம் 'சுற்றி வளைத்துப் பேசாமல் நேரே செய்தியைச் சொல்'

150. **விடை: C**

- 'He has underlined the point' என்பதற்கு 'அவர் அதைத் தெளிவாக குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்' என்பதே சரியானது.
- 'A few people' என்பதை 'ஒரு சிலர்' எனக் குறிப்பிடுவது பிழையானது: 'சிலர்' என்பதே போதுமானது.
- 'They had two rounds of talks' என்பதற்கு 'அவர்கள் இருமுறை கூடிப் பேசினார்கள்' என்பதே சரியானது,
- 'Welcome' என்பதை 'வருக, வருக' என மொழிபெயர்த்தல் பிழையற்றதாகும்.

151. **விடை: D**

- "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் மொழிபெயர்த்தல் வேண்டும்" என்று முழங்கியவர் – பாரதியார்

152. **விடை: A**

- **'A few people', 'some people'** என்பவற்றில் உள்ள 'a few' என்னும் சொற்றொடர் 'ஒரு சிலர்' என்றும், 'some people' என்பது 'சில மனிதர்கள்' என்றும் பெயர்க்கப் படுகின்றன.
- சிலர் என்பதே போதுமே. 'ஒரு சிலர்' எப்படி இருக்க முடியும்? 'சில' என்பது அ◌ஃறிணைப் பலவின் பாலாயிற்றே. 'மனிதர்கள்' என்ற பலர்பால் எப்படி அன்றிணைப் பலவின் பால் (சில மனிதர்கள் என்று) ஆக முடியும்? எனவே 'சிலர்' என்பதுதான் சரியானது. 'மிக்சிலர்' என்றும் கூறலாம்.

153. **விடை: D**

- 'முளரி' எனும் சொல் 'காடு மற்றும் தாமரை' ஆகிய இரண்டிற்கும் பொதுவான பலபொருள் சொல்லாகும்.
- 'கரி' என்னும் சொல் 'யானை, சாட்சி, அடுப்புக்கரி' ஆகிய பொருள்களைத் தரும்.
- 'ஆலம்' என்னும் சொல் 'ஆலமரம், நஞ்சு, கடல், கலப்பை' என்ற பொருள்களை உணர்த்தும்

154. **விடை: D**

(சொல்)		**(பொருள்)**
ஏனம்	-	பாத்திரம், பன்றி
உறை	-	வசி, மேலுறை
அம்பு	-	நீர், மேகம்
கலி	-	துன்பம், வறுமை

SHANKAR IAS ACADEMY

155. **விடை: A**

ஒரு சொல்	பல பொருள்
இடி	தாக்கு, வானிடி, முழக்கம், உறுதிச்சொல்.
இறை	கடவுள், நீர் இறைத்தல்
இரை	ஒலிசெய், உணவு
ஈ	கொடு, பறவை, இரத்தல், அழிவு
உரம்	எரு, ஞானம், மதில், வலிமை
உரம்	எரு, ஞானம், மதில், வலிமை

156. **விடை: B**

கவி	குரங்கு, கவிஞர், பாடல்
கம்பம்	தூண், நடுக்கம்
கப்பல்	கலம், நாவாய்
கா	காப்பாற்று, சோலை, காவடி, பூப்பெட்டி
காயம்	பெருங்காயம், புண், உடல், நிலைபேறு

157. **விடை: C**

ஓவியம்	ஓவு, ஓவியம், ஓவம், சித்திரம், படம், படாம், வட்டிகைச்செய்தி
ஓவியம் வரைபவர்	கண்ணுள் வினைஞர், ஓவியப் புலவர், ஓவமாக்கள், கிளவி வல்லோன், சித்திரக்காரர், வித்தகர்
ஓவியக் கூடம்	எழுதெழில் அம்பலம், எழுத்துநிலை மண்டபம், சித்திர அம்பலம், சித்திரக்கூடம், சித்திரமாடம், சித்திரமண்டபம், சித்திர சபை

158. **விடை: C**

ஒரு சொல்	பல பொருள்
கடி	மணம், காவல், விரைவாக, கூர்மையான, வாசனை, காவல், கடித்(தல்), சிறப்பு, களிப்பு, அச்சம்
அன்னம்	**சோறு, ஒருவகைப் பறவை**
எகினம்	அன்னம், நீர்நாய், புளியமரம்
ஏறு	காளை, ஆண் சிங்கம், மேலே செல்

SHANKAR IAS ACADEMY

159. **விடை: B**

(சொல்)		**(பொருள்)**
➢ பிரசம்	–	தேன்
➢ கொழுஞ்சோறு	–	கொழுஞ்செல்வம்
➢ அயம்	–	ஆடு, குதிரை
➢ அண்டயோனி	–	ஞாயிறு

160. **விடை: C**

சரியான இணைப்புச் சொல்:

➢ மழை நன்றாக பெய்தது. எனவே, எங்களால் விளையாட முடியவில்லை

161. **விடை: C**

➢ **'பாடு'** எனக் கூறியவுடன் பாடுபவர், **'ஆசுகவி'**. செவிக்கினிய ஓசைநலம் சிறக்கப் பாடுபவர், **'மதுரகவி'**.

➢ சொல்லணி அமைத்துச் சுவை வளம் செழிக்கப் பாடுபவர், **'சித்திரகவி'.**

➢ தொடர்நிலைச் செய்யுளும், தூய காப்பியங்களும் இயற்றுபவர், **'வித்தாரக்கவி'.**

➢ இந்த நால்வகைக் கவிகளையும் பாடவல்ல பாவலனைப் பாவலரேறு எனத் தமிழறிந்தோர் போற்றுவர். தமிழ் மன்னர் பாராட்டுவர்.

162. **விடை: D**

<u>முதற்போலி</u>

➢ **பசல் – பைசல், மஞ்சு – மைஞ்சு, மயல் – மையல்** ஆகிய சொற்களில் முதல் எழுத்து மாறினாலும் பொருள் மாறவில்லை.

➢ இவ்வாறு **சொல்லின் முதலில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தருவது** முதற்போலியாகும்.

<u>இடைப்போலி</u>

➢ **அமச்சு – அமைச்சு, இலஞ்சி – இலைஞ்சி, அரயர்– அரையர்** ஆகிய சொற்களில் இடையில் உள்ள எழுத்து மாறினாலும் பொருள் மாறவில்லை.

➢ இவ்வாறு **சொல்லின் இடையில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தருவது** இடைப்போலியாகும்

<u>கடைப்போலி</u>

➢ **அகம் – அகன், நிலம்– நிலன், முகம் – முகன், பந்தல்– பந்தர், சாம்பல்– சாம்பர்** ஆகிய சொற்களில் இறுதியில் உள்ள எழுத்து மாறினாலும் பொருள் மாறவில்லை.

➢ இவ்வாறு **சொல்லின் இறுதியில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தருவது** கடைப்போலியாகும்.

➢ அ◌ிறிணைப் பெயர்களின் இறுதியில் நிற்கும் **மகர எழுத்திற்குப் பதிலாக னகரம் கடைப்போலியாக வரும். லகர எழுத்திற்குப் பதிலாக ரகரம்** கடைப்போலியாக வரும்

SHANKAR IAS ACADEMY

முற்றுப்போலி:

- மூவகைப் போலிகள் மட்டுமன்றி வேறு ஒரு வகைப் போலியும் உண்டு.
  - ஐந்து– அஞ்சு
- இதில் அஞ்சு என்னும் சொல் ஐந்து என்னும் சொல்லின் போலி வடிவமாகும். அஞ்சு என்ற சொல்லில் உள்ள எழுத்துகள் அனைத்தும் வேறுபட்டு இருந்தாலும் அஃது ஐந்து என்னும் பொருளையே தருகிறது.
- இவ்வாறு **ஒரு சொல்லில் இயல்பாக அமைந்த எழுத்துகளுக்குப் பதிலாக எழுத்துகள் அனைத்தும் வேறுபட்டாலும் பொருள் மாறாமல் இருப்பது முற்றுப்போலி** எனப்படும்

163. **விடை: C**

- 'அறன் வலியுறுத்தல்' எனும் திறக்குறள் அதிகாரத் தலைப்பில் அமைந்துள்ள போலி: கடைப்போலி.

கடைப்போலி

- **அகம் – அகன், நிலம்– நிலன், முகம் – முகன், பந்தல்– பந்தர், சாம்பல்– சாம்பர்** ஆகிய சொற்களில் இறுதியில் உள்ள எழுத்து மாறினாலும் பொருள் மாறவில்லை.
- இவ்வாறு **சொல்லின் இறுதியில் இருக்க வேண்டிய எழுத்திற்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து அமைந்து அதே பொருள் தருவது** கடைப்போலியாகும்.
- அஃறிணைப் பெயர்களின் இறுதியில் நிற்கும் **மகர எழுத்திற்குப் பதிலாக னகரம் கடைப்போலியாக வரும். லகர எழுத்திற்குப் பதிலாக ரகரம்** கடைப்போலியாக

164. **விடை: C**

போலி:

- **சொல்லின் முதலிலோ, இடையிலோ, இறுதியிலோ இயல்பாக இருக்க வேண்டிய ஓர் எழுத்திற்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து இடம்பெற்று அதே பொருள் தருவது** போலி எனப்படும்.
- **போலி** என்னும் சொல் **போல இருத்தல்** என்பதிலிருந்து தோன்றியது. போலி மூன்று வகைப்படும்.
  - **முதற்போலி**
  - **இடைப்போலி**
  - **கடைப்போலி**

165. **விடை: D**

அறுசுவையின் பயன்கள்

- இனிப்பு – வளம்
- துவர்ப்பு – ஆற்றல்
- கைப்பு – மென்மை
- கார்ப்பு – உணர்வு
- உவர்ப்பு – தெளிவு
- புளிப்பு – இனிமை

SHANKAR IAS ACADEMY

166. **விடை: D**

நான்மணிக்கடிகை

- **நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்**
  குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை
- **நலத்துக் கணிபென்ப நாணந் தனக்கணியாம்**
  தான்செல் உலகத் தறம்.

பொருள்:

- நெல்லுங் கரும்புங் கழனிக்கு அழகு; தாமரை குளத்துக்கு அழகு; நாணம் பெண்மைக்கு அழகு; அறங்கள் ஆண்மைக்கு அழகாகும்.

167. **விடை: A**

- நாணம் பெண்மைக்கு அழகு.

168. **விடை: A**

நான்மணிக்கடிகை

- **இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்**
  வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
- **கிளைஞரில் போழ்தில் சினம் குற்றம் குற்றம்**
  தமரல்லார் கையகத்து ஊண்

பொருள்:

- இளம் பருவத்தில் கல்வி கற்காதது குற்றம். செல்வ செழுப்பற்ற நிலையில் பிறருக்கு வாரி வழங்குவது குற்றம். சுற்றத்தார் அருகில் இல்லாதபோது அவர்மேல் கோபம் கொள்வது குற்றம். மெய்யன்பு (உள்ளன்பு) இல்லாதவர் இல்லத்தில் உணவு உண்ணுதல் குற்றம்.

169. **விடை: B**

நான்மணிக்கடிகை

மனைக்கு விளக்கம் மடவார்; மடவார்
தனக்குத் தகைசால் புதல்வர்; - மனக்கினிய
காதல் புதல்வர்க்குக் கல்வியே; கல்விக்கும்
ஓதின் புகழ்சால் உணர்வு.

பாடல்பொருள்

- குடும்பத்தின் விளக்குப் பெண்ணாவாள். அப்பெண்ணுக்கு விளக்கினைப் போன்றவர்கள், அவள் பெற்ற பண்பில் சிறந்த பிள்ளைகள். மனத்திற்கினிய அன்புமிக்க அப்பிள்ளைகளுக்கு விளக்கினைப் போன்றது கல்வி. அக்கல்விக்கு விளக்காக விளங்குவது எதுவென்றால், அவர்களிடம் உள்ள நல்லெண்ணங்களே.

SHANKAR IAS ACADEMY

170. **விடை:**

நான்மணிக்கடிகை

- **பெருக்குக நாட்டாரை நன்றின்பா லுய்த்துத்**
  தருக்குக வொட்டாரைக் கால மறிந்தாங்கு
- **அருக்குக யார்மாட்டும் உண்டி சுருக்குக**
  செல்லா இடத்துச் சினம்.

பொருள்:

- நண்பர்களை நல்ல வழியில் நெறிப்படுத்துக. பகைவரை தக்க காலம் வரும்போது வெற்றி கொள்க. வேறிடம் சென்று உணவு
- உண்ணுவதைத் தவிர்த்திடுக. தகாத இடங்களில் கோபம் கொள்ளாமல் இருந்திடுக.

171. **விடை: D**

- நான்மணிக் கடிகை, இதில் கடிகை என்றால் அணிகலன் என்பது பொருள்.
- நான்கு வகையான மணிகளால் கோக்கப்பட்ட ஒருவகை அணிகலனைப்போல் பாடல்தோறும் நான்கு நீதிகளைக் கொண்ட நூற்று நான்கு வெண்பாக்களால் ஆன நூலாகும்.
- இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- **கடிகை என்ற சொல்லுக்கான பொருள்:**
  - **துண்டு**
  - **தோள்வளை**
  - **அணிகலன்**

172. **விடை: A**

நான்மணிக்கடிகை

- **இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்**
  வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
- **கிளைஞரில் போழ்திற் சினங்குற்றம் குற்றந்**
  தமரல்லார் கையகத் தூண்.

பொருள்:

- இளம் பருவத்திற் கல்லாமை குற்றம்; பொருளில்லாத காலத்தில் ஈதல் குற்றம்; உறவினர் துணையில்லாத காலத்தில் பிறரைச் சினத்தல் குற்றம்; உள்ளன்பிலார்மாட்டு உண்ணுதல்,குற்றம்

173. **விடை: D**

- **‘சுருக்குக செல்லா இடத்துச் சினம்’’** தன் சினம் செல்லாத இடத்திலே அச்சினத்தைச் செல்லாமல் சுருக்கிக் கொள்ளுக; என்பது நான்மணிக்கடிகை.
- தன்னைக் காட்டினும் வலியாரைச் சினந்து கொள்வதால்
- தனக்குத்தான் தீமையுண்டாகும்.
- தன்னை விட வலியாரிடம் தன் சினம்
- செல்லாது. ஆதலால் அச்சினத்தை அடக்கிக்கொள்ளுவதே அறிவுடைமையாகும்.

SHANKAR IAS ACADEMY

174. **விடை: C**

நான்மணிக்கடிகை

- கள்வம் என்பார்க்கும் துயில் இல்லை, காதலிமாட்டு
- உள்ளம் வைப்பார்க்கும் துயில் இல்லை, ஒண் பொருள் செய்வம் என்பார்க்கும் துயில் இல்லை, அப்பொருள்
- காப்பார்க்கும் இல்லை துயில். (பாடல்-7)

175. **விடை: A**

- நிலையாமை என்னும் கருத்தை அறவிலக்கியங்களும் குறிப்பிடுகின்றன நிலையில்லாப் பொருளைத் தேடியலையும் மனித வாழ்விவைப் பொருளற்றது என்கிறது நான்மணிக்கடிகை.

176. **விடை: C**

நான்மணிக்கடிகை ஆசிரியர் குறிப்பு :

- நூலாசிரியரின் பெயர் விளம்பிநாகனார்
  விளம்பி என்பது ஊர்ப்பெயர்
- நாகனார் என்பது புலவரின் இயற்பெயர்
- காலம்-கி.பி. 200க்கு முற்பட்டது
- கடைச் சங்க காலம், ஊர் விளம்பி என்னும் ஊரில் பிறந்தார்;
- நாகனார் என்பது இயற்பெயர், விளம்பி என்னும் ஊரில் பிறந்ததால் விளம்பி நாகனார் எனப்பட்டார்.
- நூற்று நான்கு வெண்பாக்களால் ஆன நூலாகும். இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- ஒவ்வொரு பாட்டும் நான்கு அறக்கருத்துகளைக் கூறுகின்றது. இதில் மாணவர்தம் பருவத்திற்கேற்ற நீதிகளும் உண்மைகளும் மிளிர்வது சிறப்பாகும்.

177. **விடை: A**

நாலடியார்

வைப்புழிக் கோட்படா வாய்த்தியிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற்று அல்ல பிற

பாடலின் பொருள்

- கல்வியைப் பொருள் போல வைத்திருப்பினும் அது பிறரால் கொள்ளப்படாது. ஒருவற்கு வாய்க்கும்படி கொடுத்தாலும் குறைவுபடாது. மிக்க சிறப்பினை உடைய அரசராலும் கவர முடியாது. ஆதலால் ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் கல்வியே ஆகும். மற்றவை செல்வம் ஆகா.

SHANKAR IAS ACADEMY

178. **விடை: C**

தெளிந்து கற்க

- கல்வி கரையில கற்பவர் நாள்சில
  மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்
- ஆராய்ந்(து) அமைவுடைய கற்பவே நீரொழியப்
  பாலுண் குருகின் தெரிந்து.

பொருள்:

- கல்வி அளவில்லாதது; எல்லையற்றது; முடிவற்றது; ஆனால், கல்வி கற்பவர் வாழ்நாட்களோ சிலவாகும். சற்று பொறுமையாக நினைத்துப்பார்த்தால் அச் சில வாழ்நாட்களில் பிணிகள் பலவாயிருக்கின்றன. பாலுடன் நீரும் கலந்து இருக்கும்போது, அதிலிருந்து நீரை நீக்கிப் பாலை மட்டும் தனித்துப் பிரித்து அருந்தும் அன்னப் பறவையைப்போல, அறிவுடையோர் பயனற்ற நூல்களைத் தவிர்த்து, கற்கத்தகுந்த சிறந்த நூல்களை மட்டுமே ஆராய்ந்து கற்பார்கள்.

179. **விடை: C**

புறநானூறு

- **இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டிக் கண்திரள் நோன்காழ் திருத்தி, நெய் அணிந்து, கடியுடை வியன்நக ரவ்வே : அவ்வே, பகைவர்க் குத்திக், கோடுநுதி சிதைந்து, கொல்துறைக் குற்றில மாதோ ; என்றும் உண் டாயின் பதம் கொடுத்து,**
- **இல் லாயின் உடன் உண்ணும்,**
- **இல்லோர் ஒக்கல் தலைவன்,**
- **அண்ணல்எம் கோமான், வைந் நுதி வேலே.**
- பாடியவர் : அவ்வையார்.
- பாடப்பட்டோன் : அதியமான் நெடுமான் அஞ்சி.
- திணை : பாடாண்.
- துறை : வாண் மங்கலம்,

180. **விடை: C**

மூதுரை

- மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்-மன்னற்குத் தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச் சென்றவிட மெல்லாம் சிறப்பு. (26)

181. **விடை: C**

அறவுணர்வு உடையாரிடத்து உள்ளவை

இல்லார்க்கொன் றீயும் உடைமையும். இவ்வுலகில் நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும் - எவ்வுயிர்க்கும் துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும் நன்றறியும் மாந்தர்க் குள.

SHANKAR IAS ACADEMY

பொருள் :

- வறியவர்க்குப் பொருளை அளித்தல், இவ்வுலகத்துப் பொருள்களின் நிலையாமையை அறிந்து நல்வழி நிற்றல், எவ்வுயிரையும் துன்புறுத்தாத நிலையில் வாழ்தல் என்னும் இம்மூன்றும் அறவழியில் நடக்கும் மக்களுக்கே என்றும் உண்டு.

182. **விடை: B**

மன்னர்போல் வாழ்வார்

கடம்பட்டார் காப்பில்லார் கைத்தில்லார் தங்கால்
முடம்பட்டார் மூத்தார்மூப் பில்லார்க்(கு) - உடம்பட்டு
உடையராய் இல்லுள்ஊண் ஈத்துண்பார் மண்மேல்
படையராய் வாழ்வார் பயின்று.

- கடமையைச் செய்துகொண்டிருப்பவர்
- பாதுகாப்பு இல்லாதவர்
- கையில் ஒன்றும் இல்லாதவர்
- தனது கால் முடம் பட்டிருப்பவர்
- அகவையில் மூத்தவர்
- மூப்பு இல்லாமல் மிக இளமை நிலையில் இல்லத்தில் இருப்பவர்
- இவர்களைத் தன் இல்லத்தில் இருத்தி உணவு கொடுத்து உண்பாரேல் இந்த நிலவுலகில் படை உடைய வேந்தர் போல் பலபடப் போற்றப்பட்டு வாழ்வார்.

183. **விடை: A**

<u>தொழிலாகு பெயர்</u>

- ஒரு தொழிலின் பெயர் அத்தொழிலால் அமைந்த பொருளுக்கு ஆகி வருவது தொழிலாகு பெயர் எனப்படும்.
- **(எ.கா) சுண்டல் உண்டான்.**
  - இதில் சுண்டல் என்னும் தொழிற்பெயர் அத்தொழிலால் அமைந்த பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

184. **விடை: B**

(சொல்)		**(பொருள்)**
கடம்பட்டார்	–	கடன் சுமையால் வாடுபவர்
கைத்தில்லார்	–	செல்வம் (கைப்பொருள்) இல்லாதவர் அல்லது வறியவர்
மூத்தார்	–	முதிர்ச்சி அடைந்தவர்கள்
இல்	–	வீடு

185. **விடை: D**

SHANKAR IAS ACADEMY

186. **விடை: B**

ஏலாதி:

- ஏலாதியை இயற்றியவர் கணிமேதாவியார். இவருக்குக் கணிமேதையர் என்னும் மற்றொரு பெயருமுண்டு.
- இவர், சமண சமயத்தவர் என்பர்.
- இவர், சமண சமயத்திற்கே உரிய கொல்லாமை முதலான உயரிய அறக்கருத்துகளை ஏலாதியில் வலியுறுத்திக் கூறுகிறார்.
- இவர் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு.
- இவர், திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.

187. **விடை: D**

ஏலாதி:

- ஏலம் + ஆதி - ஏலாதி. நான்கடிகளில் ஆறு அருங்கருத்துகளை இந்நூல் நவில்கிறது. இந்நூல் தமிழருக்கு அருமருந்து போன்றது.
- ஏலம் என்னும் மருந்துப்பொருளை முதன்மையாகக்கொண்டு இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றினால் ஆன மருந்துப் பொருளுக்கு ஏலாதி என்பது பெயர்.
- இம்மருந்து, உண்ணுபவரின் உடற்பிணியைப் போக்கும். அதுபோல, இந்நூலின் நற்கருத்துகள், கற்போரின் அறியாமையை அகற்றும்.
- இந்நூல் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உட்பட எண்பத்தொரு வெண்பாக்களைக் கொண்டுள்ளது.
- சிறந்த அறநெறிகளைக் கூறுகிறது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்

188. **விடை: D**

திரிகடுகம்

- முறைசெய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில் நிறையிலான் கொண்ட தவமும் - நிறையொழுக்கம் தோற்றாதான் பெற்ற வனப்பு மிவைமூன்றும் தூற்றின்கட் டூவிய வித்து. (பாடல்-80)
- நீதி நூல்வழி முறைசெய்யும் திறமில்லாதவன் வென்ற அவைத் தலைமையும்; உள்ளத்தின்கண் அவாவுடையான் மேற்கொண்ட தவமும்; நிறைந்த நல்லொழுக்கத்தை அறிந்து நடவாதவன் பெற்ற அழகும் இவை மூன்றும் புதலிடத்து (விளையாத நிலத்தில்) விதைத்த விதையையொக்கும்.

189. **விடை: C**

முதுமொழிக்காஞ்சி

சிறந்த பத்து

- **(சிறந்ததெனக் கூறப்படும் பத்துப் பொருளைத் தன்னகத்தே கொண்டிருப்பது சிறந்த பத்து)**
  - ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
  - ஓதலில் சிறந்தன்(று) ஒழுக்கம் உடைமை.
  - காதலில் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்.
  - மேதையில் சிறந்தன்று கற்றது மறவாமை.

SHANKAR IAS ACADEMY

- வண்மையில் சிறந்தன்று வாய்மை யுடைமை.
- இளமையில் சிறந்தன்று மெய்பிணி இன்மை
- நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று.
- குலனுடை மையின் கற்புச் சிறந்தன்று.
- கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.
- செற்றாரைச் செறுத்தலில் தற்செய்கை சிறந்தன்று.
- முன்பெரு கலின்பின் சிறுகாமை சிறந்தன்று.

190. **விடை: B**

பழமொழி நானூறு

- மக்கள்தம் பட்டறிவால் பெற்ற கருத்தைச் சுருக்கமாகக் கூறியதே பழமொழி யாகும்.
- பழமொழியை முதுரை, முதுமொழி, உலக வசனம் எனவும் கூறுவர்.
- ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு பழமொழி இடம் பெறுமாறு பாடப்பெற்ற நானூறு வெண்பாக்களைக் கொண்ட நூல 'பழமொழி இதனைப் பழமொழி 'நானூறு' எனவும் குறிப்பிடுவர்.
- இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். இது தமிழறிஞர்களால் நாலடியாருக்கு இணையாக வைத்து மதிக்கப்படுகிறது.
- எட்டாம் நூற்றாண்டுக்கு முன்னர், தமிழகத்தில் வாழ்ந்த மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கம், மன இயல்பு ஆகியவற்றை அறிவதற்குரிய செய்திக்குறிப்புகளை பெற்றுள்ளது.

191. **விடை: C**

பழமொழி நானூறு

- தம்மால் முடிவதைத் தாம் ஆற்றிச் செய்கலார், பின்னை, ஒருவரால் செய்வித்தும் என்று இருத்தல் செல் நீர் அருவி மலைநாட பாய்பவோ, வெந்நீரும் ஆடாதார் தீ? (பாடல்: 293)
- ஓடிவரும் அருவியை உடைய மலைநாடனே! தாமே செய்து முடிக்க வேண்டியவற்றைச் செய்து முடிக்காது, இன்னொருவரால் அச்செயலைச் செய்து முடிப்போம் என்று இருப்போர், செய்திறன் அற்றோர் ஆவர். அருகு இருக்கும் வெந்நீரிலேயே குளிக்க அஞ்சுபவர் தீயில் பாய்வாரா? மாட்டார்.

192. **விடை: D**

பழமொழி நானூறு

- மாரி ஒன்று இன்றி வறந்திருந்த காலத்தும் பாரி மட மகள் பாண்மகற்கு நீர் உலையுள் பொன் திறந்து கொண்டு புகாவாக நல்கினாள் ஒன்று உறா முன்றிலோ இல் (பாடல்}171)
- மழை பொழியாது வறண்டு போயிருந்த காலத்திலும்கூட, பாரி வள்ளலின் மடப்பத்தை உடைய மகளானவள், தன்னை இரந்து நின்ற பாணனுக்கு நீர் உலையுள் செய்து அழகாக சமைத்து வைத்திருந்த சோற்றுப் பானையைத் திறந்து, பொன்மனங் கொண்டு சோற்றை கொடுத்து உதவினாள். ஆதலால், சென்று இரந்தால் ஒன்றும் கிடைக்காது போகிற வீட்டு முற்றம் என்பது உலகில் எதுவுமே இல்லை. "ஒன்று உறா முன்றிலோ இல்' என்பது பழமொழி.

SHANKAR IAS ACADEMY

193. **விடை: D**

முதுமொழிக்காஞ்சி

சிறந்த பத்து

- **(சிறந்ததெனக் கூறப்படும் பத்துப் பொருளைத் தன்னகத்தே கொண்டிருப்பது சிறந்த பத்து)**
  - ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
  - ஓதலில் சிறந்தன்(று) ஒழுக்கம் உடைமை.
  - காதலில் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்.
  - மேதையில் சிறந்தன்று கற்றது மறவாமை.
  - வண்மையில் சிறந்தன்று வாய்மை யுடைமை.
  - இளமையில் சிறந்தன்று மெய்பிணி இன்மை
  - நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று.
  - குலனுடை மையின் கற்புச் சிறந்தன்று.
  - கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.
  - செற்றாரைச் செறுத்தலில் தற்செய்கை சிறந்தன்று.
  - முன்பெரு கலின்பின் சிறுகாமை சிறந்தன்று.

194. **விடை: A**

நாலடியார்

- அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
  திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் - திங்கள்
- மறுவாற்றும் சான்றோர ஃ தாற்றார் தெருமந்து
  தேய்வர் ஒருமா சுறின்.

<u>பொருள்:</u>

அகன்ற வானத்தில் இருந்துகொண்டு நிலவொளியைத் தரும்திங்களும்

- அறிவொளி தரும் சான்றோரும் ஒருவகையில் ஒப்பாவர். ஒரு வகையில் ஒப்பாக மாட்டார்.
- திங்கள் களங்கத்தைத் தாங்கிக்கொள்ளும். சான்றோர் தன் பெயருக்கு ஒரு மாசு வந்தாலும் மனமுடைந்து தேய்வர்.
- இப்பாடலில் பயின்று வந்துள்ள அணி: வேற்றுமை அணி
- இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையை முதலில் கூறி, பின்னர் அவற்றில் ஒன்றை மற்றொன்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணி எனப்படும்.

195. **விடை: C**

நாலடியார்

நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்
சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும் செய்விளைக்கும்
வாய்க்கால் அனையார் தொடர்பு

SHANKAR IAS ACADEMY

பாடல்பொருள்

- நாயின் கால்விரல்கள் நெருங்கி இருக்கும். அதனைப்போலச் சிலர் நம்மோடு நெருக்கமாக இருப்பார்கள். ஆனால், அவர்கள் ஈயின் கால் அளவுக்குக்கூட நமக்கு உதவ மாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் நட்பால் நமக்கு என்ன பயன் ?
- வாய்க்கால், தொலைவிலுள்ள நீரைக் கொண்டுவரும்; அந்நீரை வயலுக்குப் பாய்ச்சி விளைய உதவும். வாய்க்காலைப்போல உதவும் மனிதர்கள் இருக்கிறார்கள். எவ்வளவு தொலைவில் இருந்தாலும் அவர்கள் நட்பை நாம் தேடிக்கொள்ளுதல் வேண்டும்.

196. **விடை: B**

- **அறுவடைத் திருநாள்** ஆந்திரம், கர்நாடகம், மராட்டியம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் **மகரசங்கராந்தி** என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது.
- பஞ்சாப் மாநிலத்தில் **லோரி** என்று கொண்டாடப்படுகிறது.
- குஜராத், இராஜஸ்தான் மாநிலங்களில் **உத்தராயன்** என்று கொண்டாடப்படுகிறது

197. **விடை: D**

காட்டைக் குறிக்கும் வேறு பெயர்கள்

- கா – பொற்றை – மிளை
- கால் – பொழில் – இறும்பு
- கான் – தில்லம் – சுரம்
- கானகம் – அழுவம் – பொச்சை
- அடவி – இயவு – பொதி
- அரண் – பழவம் – முளி
- ஆரணி – முளரி – அரில்
- புரவு – வல்லை – அறல்
- வனம் – விடர் – பதுக்கை
- முதை – வியல் – கணையம்

198. **விடை: B**

அறுசுவையின் பயன்கள்

- இனிப்பு – வளம்
- துவர்ப்பு – ஆற்றல்
- கைப்பு – மென்மை
- கார்ப்பு – உணர்வு
- உவர்ப்பு – தெளிவு
- புளிப்பு – இனிமை

SHANKAR IAS ACADEMY

நாட்டுப்புற பாடல்கள்

- தாலாட்டுப் பாடல்கள்
- விளையாட்டுப் பாடல்கள்
- தொழில் பாடல்கள்
- சடங்குப் பாடல்கள்
- கொண்டாட்டப் பாடல்கள்
- வழிபாட்டுப் பாடல்கள்
- ஒப்பாரிப் பாடல்கள்

199. **விடை: D**

- தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று ஐந்து வகைப்படும்.

200. **விடை: D**

- **'பாடு'** எனக் கூறியவுடன் பாடுபவர், **'ஆசுகவி'**. செவிக்கினிய ஓசைநலம் சிறக்கப் பாடுபவர், **'மதுரகவி'.**
- சொல்லணி அமைத்துச் சுவை வளம் செழிக்கப் பாடுபவர், **'சித்திரகவி'.**
- தொடர்நிலைச் செய்யுளும், தூய காப்பியங்களும் இயற்றுபவர், **'வித்தாரக்கவி'.**
- இந்த நால்வகைக் கவிகளையும் பாடவல்ல பாவலனைப் பாவலரேறு எனத் தமிழறிந்தோர் போற்றுவர். தமிழ் மன்னர் பாராட்டுவர்

******

SHANKAR IAS ACADEMY